**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை :- **திரு. A.S. அமீர்தீன், B.A.,B.L.,L.L.M.,DJJJ.,Psy.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி,(முழு கூடுதல் பொறுப்பு)

நீதித்துறை நடுவர் எண்.1, மன்னார்குடி.

2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 06 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

திருவள்ளுவராண்டு 2053 ஸ்ரீ சுபகிருது வருடம் மார்கழித் திங்கள் 22 ஆம் நாள்

**இடைநிலை மனு எண். 357/2022-ல்**

**அசல் வழக்கு எண். 22/2021**

ஜீலைகாபீவி .... மனுதாரர்/வாதி

**// எதிர்//**

1. உதயகுமார்

2. ஜீவா ....எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு 22.06.2022 ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு இன்று (23.12.2022) என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. எஸ்.உதயகுமார்** அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. G. ஜீவானந்தம் அவர்கள்** முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலனையிலிருந்து இன்று(06.01.2023) இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவானது, அசல் வழக்கு 08.09.2022 ம் தேதியன்று மனுதாரர்/வாதியின் தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டுள்ள உத்தரவை ரத்து செய்து வழக்கை கோப்பில் எடுத்து உத்தரவிடக்கோரி உ.ந.ச.கட்டளை 9 விதி 9-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்** :-

அசல் வழக்கு விசாரணைக்காக 08.09.2022 ம் தேதியன்று வாய்தா போடப்பட்டிருந்தபோது வைரஸ் காய்ச்சல் ஏற்பட்டு உடல்நலம் பாதித்த நிலையில் தொடர் மருத்துவ சிகிச்சையிலிருந்ததால் ஆஜராகாததால் தவறுகை காரணமாக தள்ளுபடிசெய்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்யவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

3. **<u>2ம் எதிர்மனுதார் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u>:-(<u>1ம் எதிர்மனுதாரர் தனதாக ஏற்றுக்கொள்கிறார்</u>):-**

வாதிக்கு உடல்நலம் சரியில்லை என்பதற்கான மருத்துவ சான்றோ அல்லதுவேறு ஏற்றுக்கொள்ளத் தக்க ஆதார ஆவணமோ தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

4. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

5. **இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை ஆகும்.**

இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

இந்நீதிமன்றத்தால் கடந்த 08.09.2022ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்ட இவ்வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுத்து விசாரிக்க வழிவகை உள்ளதா என்பதை பரிசீலிக்கையில்...

இவ்வழக்கில் வாதியை குறுக்கு விசாரணை செய்வதற்காக இந்நீதிமன்றத்தில் முன்னிலையாக வாதி தரப்பு 1வது சாட்சிக்கு உத்தரவிட்டிருந்தநிலையில், மேற்படி உத்தரவை மதிக்காமல் மேற்படி வாதி தரப்பு 1வது சாட்சி நீதிமன்றத்திற்கு வராததால் மேற்படி வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டது மேற்படி ஆவணங்களிலிருந்து தெரியவருகிறது.

எந்த ஒரு வழக்காக இருந்தாலும் இருபுறமும் அவர்களது தரப்பு நியாயங்களை சாட்சியங்களாக பதிவு செய்து தீர்மானம் செய்யாதபட்சத்தில் மேற்படி தீர்வானது ஒரு முழுமையான தீர்வாக இருக்காது என்பதை கருத்திற்கொண்டும்நீதியின் நலன் கருதியும் வழக்கின் தன்மை சந்தர்ப்ப சூழ்நிலை ஆகியவற்றை கருத்திற்கொண்டு மேற்படி அசல் வழக்கான 22/2021-ல் ஏற்பட்ட தள்ளுபடி உத்தரவை ரத்து செய்து இம்மனுவினை அனுமதித்து மேற்படி வழக்கு கோப்பை மீண்டும் எடுக்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்வுக்காண்கிறது.

மேலும், இம்மனுவினை அனுமதிப்பதால் மேற்படி எதிர்மனுதாரருக்கு எந்தவித கஷ்ட, நஷ்டமும் ஏற்படபோவதில்லை என்பதை இந்நீதிமன்றம் கருத்திற்கொள்கிறது.

**முடிவில், இம்மனுவானது கடந்த 08.09.2022ம் தேதியன்று வாதியின் வருகையின்மையால் தள்ளுபடி செய்யப்பட்ட உத்தரவை ரத்து செய்து அசல் வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுத்து மேற்படி வழக்கை மேல் நடத்திட அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.**

**மனுதாரர்/ வாதி, இம்மனுவின் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு செலவுத் தொகையாக ரூ. 500/-த்தை செலுத்தவேண்டும் என்ற நிபந்தனையுடன் மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.**

இவ்வுத்தரவு என்னால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்தரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (06.01.2023) அவையறியப் பகரப்பட்டது.

A S AMEERDHEEN

Digitally signed by A S AMEERDHEEN
DN: cn=A S AMEERDHEEN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.(மு.கூ.பொ)

-